**Word**
**Of**
**Christ**

# கிறிஸ்துவின் வசனம்





ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

# ஆசிரியர் கடிதம்

11-8-96

வாசகர்களுக்கு,

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நான்கு ஆண்டுகள் முடிந்து இந்த ஐந்தாம் ஆண்டிலும் இவ்விதழை வெளியிட கர்த்தர் கிருபை செய்திருக்கிறார், உங்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் பதிலை எதிர் பார்கின்றேன் சிலர் அனுப்புகிறீர்கள் பலர் இவ் விதழை என் அனுப்புகிறார்கள் என்று சொல்லி வேண்டா வெறுப்புமாய் பெற்று உதாசினப்படுத்திவருகிறார்கள், நாங்கள் எங்கள் சுயயோசனையை சொல்லவில்லை, ஒரு கட்டுகதையையும் சொல்லவில்லே, ஒரு சொப்பனத்தையும் சொல்லி உங்களை வஞ்சிக்கவில்லை புதிய ஏற்பாடு சத்தியங்களை ''கிறிஸ்துவின் உபதேசத்தை'' முழுவதுமாக பத்திரிக்கை மூலம் பிரசுரித்து வருகிறோம்.

இது உங்களுக்கு கடினமாக இருந்ததென்றால் எங்களுக்கு பத்திரிகை அனுப்பவேண்டாமென்று ஒரு 15 பைசா போஸ்ட் கார்டு மூலம் தெரியப்படுத்துங்கள். அவ் விதழை வெளி 3:20 ன் படி கதவைத்திறக்கும் வீடுகளுக்கு அனுப்பி வைப்போம். உங்களுக்காக ஜெபிப்போம் நாங்கள் இவ்வூழியத்திற்க்காக பணம் ஏதும் வசூலிப்பதுஇல்லை பரலோகராஜ்யத்தில் பொக்கிஷங்களை சேர்க்கவே ''வத்தலககுண்டு கிறிஸ்துவின் சபையார்கள்'' சேர்ந்து இக் காரியத்தை செய்து வருகிறோம் தற்போது 200 பேருக்கு தபால் மூலம் அனுப்புகிறோம் 200 பேர் இதழை அனுப்ப சொல்லி பதிவு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இம்மட்டும் அனுப்ப இயலாத சூழ்நிலையில் இருக்கிறோம். ஆகவே இதழை வீனடிக்காதீர்கள் மற்றவர்களுக்கும் கொடுத்து உதவுங்கள்.

நாங்கள் இதுவரை வெளியிட்ட நான்கு ஆண்டுகளின் 48 இதழை சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு ரூபாய் 100 அன்பளிப்பாக கொடுக்கப்படும்.

ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன்

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 5 | ஆகஸ்ட் 1996 | கனி 1


## O young man, Turn To God
## வாலிபனே! தேவனிடத்தில் திரும்பு

ஒரு வாலிபன் தன் வாழ்க்கையை சந்திக்கும் பொழுது, அவனுக்குள் எத்தனையோ விதமான போராட்டங்கள், பயம், வருங்காலத்தை பற்றி என்னவெல்லாம் கனவு காண்கிறான் ஆனால் வழியில் எத்தனையோ எதிர்ப்புகள், தடைகள், ஏமாற்றங்கள் இருக்கும் அதை அறியான். வாலிபத்தைப் போல ஒரு சுவாரஸ்யமான, மகிழ்ச்சியான நாட்களுமில்லை அதேசமயத்தில் அதைப்போல ஏமாற்றத்திற்குள்ளாக்கும் பருவமும் வேறில்லை 'இளங்கன்று பயமறியாது' என்ற முதுமொழிக்கிணங்க பிரதிபலனைக் குறித்து கவலைப்படாமல் துணிச்சலோடு எதையும் முயன்று பார்க்கும் சுபாவம், வாலிபப் பிராயத்திலுள்ள ஆண் பெண் இருபாலருக்கும் உண்டு.

வாலிபனின் ஜீவியம் ஒரு சவால் விடக்கூடிய ஜீவியம்தான். அவனுடைய ஜீவியத்தின் வெற்றியும், தோல்வியும் எதைபொறுத்திருக்கிறது? அவர்களுடைய வாழ்க்கையினுடைய வெற்றியின் ரகசியம் தான் என்ன? அவர்கள் வெற்றியின் ரகசியம் 2 அம்சங்களை பொறுத்ததாக இருக்கலாம்.

★ முதலாவது "எச்சரிக்கையாயிருக்கும் மனோபாவம்" எச்சரிக்கையாயிருந்தால் என்றால் ஜாக்கிரதையாயிருத்தல் என்று பொருள். அதாவது, எதையும் ஏனோதானோ வென்று எடுத்துக்கொள்ளாமல், விநயமாக, ஞானத்தோடு செயல்படுதலைக் குறிக்கும். வாழ்க்கையில் எல்லாம் தானாகவே அமைந்துவிடும் என்ற நோக்கத்தை தவிர்த்து குறிக்கோளுடன் கூடிய முயற்சியையும் இது குறிக்கும். இவை எல்லாம் வாலிபன் ஞானத்தோடு எதை தேர்ந்தெடுக்கிறானோ அதைப்பொறுத்தது. முன் பின் தெரியாமல், உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு, கவர்ச்சியை தேர்ந்தெடுத்து அதன் பிரதிபலனாக பலவித இன்னல்களை அடைந்து மனமொடிந்து. மாகா துக்கத்திலிருக்கும் வாலிப சகோதர,

சகோதரிகளை நாம் அன்றாடம் சந்திக்கிறோம்.

கொஞ்சம் புத்திசாலித்தனமான காரியங்களை தேர்ந்தெடுத்திருந்தால், இந்நிலைக்கு ஆளாகி இருக்கமாட்டேனே என்று புலம்புவோர் ஏராளம். வேதமும் இதைத்தான் கூறுகிறது. ''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான்'' (1 பேதுரு 5:8) இப்படிப்பட்ட அநேக எச்சரிக்கைகள் வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றை மதித்து செயல்பட்டால் எத்தனையோ விளைவுகளிலிருந்து காப்பாற்றப்படலாம். அநேகர் இந்த எச்சரிக்கைகளை மீறி, தங்கள் இஷ்டம்போல் ஜீவித்து அதன் பயனாக, தங்கள் சரீரத்தையும், அதற்கு மேலாக ஜீவனையும் கெடுத்துக்கொள்கிறார்கள்.

★ இரண்டாவது, வெற்றியின் இரகசியம் தெய்வீக வழிகாட்டியில் இருக்கிறது.

தெய்வீக வழிகாட்டி என்றால்; தேவனுடைய வசனத்தால் வழி நடத்தப்படுதல். நாம் எதைச் செய்தாலும், தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டு செயல்படவேண்டும். ''வேதவசனங்கள் தேவாவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாயும எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாயும் இருக்குமபடியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிக்குதலுக்கும பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' (2 தீமோ. 3:16,17) நம் பெற்றோர் நம் மீது எவ்வளவு அன்பு கூறினாலும் அவர்கள் நமக்கும போதுமான வழிகாட்டியாக இருக்க முடியாது. நம ஆசிரியர் எவ்வளவு படித்தவர்களாயிருந்தாலும அவர்களும நமக்கு போதுமான வழி காட்டியாக இருக்க முடியாது. நம் நண்பர்கள் நம்மை எவ்வளவுதான் நேசித்தாலும் அவர்களும நமக்குபோதுமானவழிகாட்டியாகஇருக்கமுடியாது. இன்னும் நம்முடைய பிரசங்கிமார்கள், போதகர்கள் நமக்குபோதுமான வழிகாட்டியாக இருக்க முடியாது நம்முடைய மனசாட்சியும சரியான வழிகாட்டியாக இருக்க முடியாது (எரே 10:13).

நம்மை நித்திய வழியில் நடத்தவல்லது தேவனுடைய

வார்த்தை ஒன்றுதான். ஆகவே சாலமோன், ''கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதக சிட்சையே ஜீவ வழி'' என்றார். (நீதி.6:23) வேதவசனங்கள் நாம் பரிசுத்தமாயும் நேர்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று போதிக்கிறது. எப்படிப்பட்ட தோழமையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கற்றுக்கொடுக்கிறது. பெரும்பாலும் வாலிபர்களின் வருங்காலம் எப்படிப்பட்ட தோழமையை தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதை பொருத்திருக்கிறது. தேவனை விசுவாசியாமல், அவரை கனம்பண்ணாத மக்களோடு உறவுகொண்டால், அது நம்மை அழிவின் பாதையில் அழைத்துச்செல்லும். அதற்கு பதில் தேவஞானத்தை தேர்ந்தெடுத்து, தேவ பக்தியுள்ள மனிதர்களோடு தொடர்பு கொண்டிருக்கும்பொழுது, நாம் நல்ல பாதையில் நடத்தப்படுவோம்.

ஒரு முக்கியமான கேள்வியை சங்கீதக்காரன் தாவீது வாலிபர்களை பார்த்து கேட்கிறார். ''வாலிபன் தன்வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? யோசேப்பு, தானியேல். மற்றும் தானியேலோடு சிறைவாசத்தில்கொண்டுவரப்பட்ட 3 எபிரேய வாலிபர்கள் இவர்கள் எல்லோரும் தங்கள் வழிகளை சுத்தம் செய்தவர்கள். ஆகவே பலவான்களாயிருந்தார்கள். அப்போஸ்தலனாகிய யோவான், ''வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதனாலும்... உங்களுக்கு எழுதியிருக்கிறேன் என்றார்.'' (1 யோஹா. 2:14.)

வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? அதற்கு விடையளிக்கும்போது தாவீது கூறுகிறார். உமது வசனத்தின் படி தன்னை காத்துக்கொள்ளுகிறதினால்தானே இதை செயல்பட மிகுந்த பிரயாசம் தேவை. வாலிபன் சுத்திகரிக்கப்படுவதான மாதிரி தேவனுடைய வார்தைகளில் இருக்கிறது. கிறிஸ்துவும் பாவமில்லாதவராக இவ்வுலகத்தில் ஜீவித்து, நமக்கு ஒரு மாதிரியை வைத்துப்போயிருக்கிறார். அவரையே நம் முன்னோடியாக வைத்து அவரைப் போல மாற முயற்சிக்க வேண்டும்.

பி. ஆர். எஸ்.
வானொலி பிரசங்கியார்
சத்திய வழி
பெங்களூர் - 84.

★
★
★

★ சபை செய்திகள்:

1. ஜூலை 2-ம் தேதிமுதல் 5-ம் தேதிவரை பெங்களூரில் கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கான கருத்தரங்கு நடை பெற்றது. இதில் அநேக ஊழியர்கள் பிற மாநிலங்களி லிருந்தும் வந்து கலந்து கொண்டனர்.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை சகோ. டக்ளஸ் சிறப்பான முறையில் வந்தவர்களுக்கு போதித்தார்கள்.

2. ஜூலை 4-ம் தேதி கோவையை சேர்ந்த இரண்டு பெந்தேகோஸ்தே ஊழியர்கள் பெங்களூரில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு மெய்யான சத்தியத்தை அறிந்து கொண்டு சகோ. P. R. சாமி தேடியோ பிரசங்கி-யார் மூலம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அது சமயம் மதுரையை சேர்ந்த பிரிவினை சபையை சேர்ந்த ஒருவரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். இவர்-களுடைய ஆவிக்குறிய ஜீவியத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

★ ஜூலை மாத இதழின் விடைகள்:

1. எசேக்கியா -ஏசா 39:2
2. தீமையாயிருக்கும்-ரோ 14:20
3. பைத்தியக்காரனாகக் கடவன் I கொ 3:18
4. இப்சான் நியா 12:9
5. பட்சபாதமே இல்லை கொலோ 3:25
6. அமைதலோடு
7. கீழ்படியாமையிலேயே
8. மேன்மையாயிருக்கும்
9. சாவான்
10. யோபு

★ ஜூலை மாத இதழில் வெற்றி பெற்றவர்கள்:

1. சகோதரி மேரிஎலிசபெத் கலைவாணி வதிலை
2. சகோ ஜெபார்சன் ஜேக்கப் ஐரேனிபுரம்

★ கிறிஸ்துவின் வசன பத்திரிகை வழங்கும் பரிசு "சத்திய" வழி ஒலி நாடா பெறும் வீராங்கனை சகோதரி

மேரிஎலிசபெத் கலைவாணி, வத்தலக்குண்டு

இவர் 1995 ஆகஸ்ட் முதல் 1996 ஜூலை வரை வேத அறிவுப்போட்டியில் கலந்து கொண்டு பத்துமுறை வெற்றி பெற்று முதலாவது இடத்தை பெறுகிறார்.

குறிப்பு:- இப்பத்திரிகை இந்தியா முழுதும் தமிழ் கிறிஸ்தவர் களுக்கு விரும்புவோருக்கும் அனுப்பபடுகிறது.

[illegible]

ஆசிரியர்

## பெண்கள் பகுதி

### பெண் Woman

பெண்களைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டவை ஒட்டுமொத்தப் பெண்களின் திறன் மற்றும் குணத்திற்கு அடையாளமாக உள்ளது. காலங்கள் பல கடந்தாலும் அவளின் அடிப்படைத்தன்மை அப்படியே உள்ளது. கலாச்சாரம் என்ற போர்வையில் அவளின் ஆடை அலங்காரமும் [illegible] மாறியிருக்கலாம். ஆனால் குணங்களிலும் செயல்பாட்டிலும் அவள் மாறாதவளாகவே உள்ளாள். அவள் எதை மாற்றினாலும் ஆதியிலே தேவன் அவளுக்குக் கொடுத்த சில பண்புகளை மாற்ற முடியாது. அவைகளில் சிலவற்றைக் கீழே காண்போம்.

I ஆணின் தேவைகளை சந்திக்கும் திறனை தேவன் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

மனிதனின் சரீர தேவைகளை பூர்த்தி செய்ய ஒரே ஒரு வழி பெண்தான் என்பது இயற்கையாகவே பெண்களுக்குப் பொருந்தக் கூடியது. ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக அவளுடைய சரீரமானது உன்னதமாக, அற்புதமாக தேவனால் வடிவமைக்கப் பட்டுள்ளது. பெண் பெண்மைத் தன்மையுடையவளாகவும், எல்லா சந்தர்ப்பங்களுக்கும் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ளக் கூடிய சிறந்த தன்மையைப் பெற்றிருக்கிறாள். நம்முடைய சரீரங்களை பரிசுத்தமாகவும், வேத வசனம் சொல்லுகிறபடி தகுதியான உடையினாலும் காத்துக் கொண்டால் களங்கமில்லாத வாழ்க்கை வாழ இயலும்.

II பெண் என்பவள் தாய்மையை அடையக்கூடிய சிலாக்கியத்தை தேவனால் பெற்றிருக்கிறாள்.

வேதனையோடு அதே சமயம் அதிசயம் கலந்த ஆசீர்வாதமாகிய பிள்ளைப் பேற்றை தேவன் பெண்ணுக்குக் கொடுத்தார். ஒரு புதிய ஆத்துமாவை இந்த உலகத்திற்கு

கொண்டு வரும் சிலாக்கியத்தை பெண்ணைத் தவிர வேறு யாருக்கும் அவர் அருளவில்லை. பிள்ளைப் பேற்றில் ஆணின் பங்கு அவசியமாய் இருந்த போதிலும் பெண்ணிற்குமட்டுமே "பிறக்கச் செய்யும் அந்த விசேஷித்த வல்லமையை கொடுத்திருக்கிறார். மனித இனமோ, அல்லது அவனின் விஞ்ஞான அறிவின் வளர்ச்சியோ ஒரு புதிய "உயிரை" இவ்வுலகத்திற்கு கொண்டு வரமுடியாது.

III. பிறருக்கு சேவை செய்யும் பொறுப்பை தேவன் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

பெண் என்றாலே சேவை செய்பவள் என்பது பொருத்தமான ஒன்றாகும் அவள் இயற்கையிலேயே இறக்க குணமுள்ளவள், அவளின் அணுகுமுறையே மிகவும் மென்மையானதாகவும் ஆறுதலாகவும் உள்ளது. பிறரின் இக்கட்டில் அன்போடு விசாரிக்கிறாள். தன் கணவனுக்கு ஏற்றவாறு சேவை செய்யவே அடிமையாக அல்ல அன்பினால் சேவைசெய்ய சிருஷ்டிக்கப்பட்டவள் பெண் தாயாய் இருந்து அவள் ஆற்றும் சேவை அளவில்லாதது. வியாதியாய் இருக்கும் அயலகத்தாருக்கு அன்பையும். கருணையும் காட்டுகிறாள். முதியோர்களை சரியாக கவனித்துக் கொள்ளுதல் விதவைகள், அனாதையகள் கைவிடப்பட்டவர்கள், தனிமையாய் இருப்பவர்கள் இப்படிபட்டவர்களுக்கு ஆதரவாய் இருக்கவே பெண்களை தேவன் சரியாகப் படைத்துள்ளார்.

IV வீட்டை நிர்வாகம் செய்யும் திறனை தேவன் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

ஆண் வெளியே சென்று வாழ்க்கைப் போராட்டத்தில் போரட வேண்டியுள்ளது. தன் உழைப்பால் உயர் பதவியை அடைய முடியும் உலகத்தையே ஆதாயம் செய்யும் திறன் ஆணுக்கு உள்ளது. ஆனால் தேவன் பெண்களுக்கு எல்லாவற்றைக் காட்டிலும் விலைமதிப்புள்ள பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். நாகரீகத்தின் அடிக்கல்லான வீட்டை கட்டக்கூடிய பொறுப்பு அவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

V பிறரை தன் வசப்படுத்தும் தன்மையை தேவன் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

மனிதனின் வீழ்ச்சிக்குப் பெண்தான் காரணமாகிறாள் என்பதை நாம் பலசமயங்களில் பார்க்க முடியும் ஆதாமுக்கு தெரியும் தேவன் விலக்கி வைத்த கனியைப் புசிக்கலாகாது என்று ஆனால் தன்னால் மிகவும் நேசிக்கப்பட்ட மனைவியினிமித்தம் தன்னை பாவத்திற்கு அனுமதித்துவிட்டான். ஆதியிலிருந்தே பெண்கள் பிறரை தன்வசப்படுத்தும் திறனை நாம் அறிந்தே வருகிறோம். நம்முடைய செயல்கள் நம்முடைய குணங்களை வெளிப்படுத்துகிறது. ஆன்மீக ரீதியிலும் சரீரப்பிரகாரமாகவும் உலக சரித்திரத்தைப் பார்த்தால் பெண்களின் தாக்கத்தை நாம் கண்டு கொள்ள முடியும். யுத்தத்தின் வெற்றி தோல்வி திருமணங்கள் கூடுவது கலைவது. மகிழ்ச்சியை பெறுவது, இழப்பு இப்படி பலவற்றைப்பார்த்தால் அதற்கு அடிப்படைக் காரணமே பெண்ணாகத் தான் இருக்கும். பெண்கள் தங்களின் குணங்களை சரி செய்து கொள்ளாவிட்டால். பல ஆத்துமாக்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

தேவன் ஒரு நல்ல நோக்கத்திற்காக பெண்களை விசேஷித்த வகையில் தூய்மையாக. அழகாக. முழுமையாக படைத்தார். ஆனால் இவளோ இதைவிட்டு வேறுவழியில் செல்கிறாள் தேவனின் திட்டத்தை மீறியதால் ஏவாள் துன்பத்தையும் வேதனையையும் அடைந்தாள். அதே நிலைமை தான் இன்றைக்கு நமக்கும் நேரிடுகிறது. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம ஒருவேளை ஏவாளைவிட சற்று வித்யாசமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கலாம். பல்வேறு ஆடைகளை உடுத்துகிறோம் நம்முடைய அலங்காரங்கள் மாறுபடுகின்றன நாம் வாழும் உலகம் மிக வேகமாக முன்னேறி வருகிறது, உண்மைதான். ஆனால் நம்முடைய உள்ளான மனம் நம்முடைய சகோதரியாகிய ஏவாளைப் போலவே இருந்து வருகிறது.

நாம் நம்முடைய சொந்த அனுபவங்களையே சரியென நம்பிக் கொண்டிருக்கக் கூடாது. மற்றவர்கள் செய்யும் சரியான, தவறான காரியங்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்த்து நம்மை சரிசெய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். தேவன் எதை நம்மிடம் எதிர்பார்கிறாறோ அதற்கு

கீழ்படியாமல் மீறிநடந்து அதன் மூலம் கிடைக்கும் தண்டனையைப் பெறாமல் அவரின் சித்தத்திற்கு முழுவதும் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

வேதாகமத்தில் சொல்லப்படும் பல புத்தியுள்ள ஸ்திரீகளை நம்முன் வைத்து அவர்களை பின்பற்றி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்வோமா?

R.R. நாயகம்
வீடியோ வேதாகமக் கல்லூரி
காங்கேயம்.

## வாசகர் கடிதம்

Mercy House
Batlagundu
28—7—96

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்,

அன்புள்ள சகோதர், சகோதரி அவர்களுக்கு அன்பின் சகோதரி மேரி எலிசபெத் கலைவாணி எழுதுவது அன்பின் தேவன் கைவிடாமல் நடத்தி வருகிறார். பத்திரிகை கிடைத்தவுடன் 9 கேள்விகளுக்குப் பதில் எழுதிய நான் 5 வது கேள்விக்கு பதில் எழுதாததினால் நிம்மதியே இல்லை, வேத வசன ஆதாரத்தோடு எழுதினால்தான் நிம்மதியாக இருப்பேன். இந்தக் கேள்விக்குப் பதில் எழுதாததினால் இரவு தூக்கம் சரியாக இல்லை. எந்த அதிகாரத்தில் எந்த வசனத்தில் உள்ளது என்று நினைத்துக் கொண்டிருந்த நாள் இதை கண்டு பிடித்து எழுதியனுப்பினால்தான் நிம்மதியாக இருக்க முடியும் என்று நினைத்து, இராத்திரி வேளையிலே வேதத்தை எடுத்து உட்கார்ந்தேன். கொலோ 3:25 வசனத்தைப் பார்க்கும்படி என் கண்களைத் திறந்த தேவனுக்கு கோடாகோடி ஸ்தோத்திரம். தொடர்ந்து தேவன் வேத அறிவுகொடுத்து வழி நடத்துவார் என்று விசுவாசிக்கின்றேன உங்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

சகோதரி, J. மேரிஎலிசபெத் கலைவாணி
வத்தலக்குண்டு.

★ இம்மாத ஞான அறிவுப் போட்டி

1. தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்து வரும் கிரியையை மனுஷன் என்ன செய்யான்?

2. எது ஜீவனை அடகுவாங்குவது போலாகும்?

3. கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று யாரை ஆண்டவர் சொல்லுகிறார்?

4. யாருடைய தகப்பன் ஜூரத்தினாலும் இரத்த பேதியினாலும் வருத்தப்பட்டுக் கிடந்தான்?

5. உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல் உங்கள் சந்தோஷத்திற்குச் யாராயிருக்கிறோம்?

6. தங்கள் கிரியைகளை அந்தகாரத்தில் நடப்பித்து: நம்மைக் காண்கிறவர் யார்? நம்மை அறிகிறவர் யார்? என்கிறவர்களுக்கு என்ன?

7. நான் கர்த்தர், இது என் நாமம், என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை எவைகளுக்கும் கொடேன் என்கிறார்.

8. அன்புடன் எதைக்கைக் கொண்டு தலையாகிய யாருக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிக்கும் படியாக அப்படிச் செய்தார்?

9. தன் பிராணனையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தவன் யார்?

10. என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் என்ன செய்யப்படாதிருங்கள்?

முதல் ஐந்திற்க்கு வேத வசன ஆதாரத்துடனும் கடைசி ஐந்திற்க்கு வேதத்திலிருந்து விடை மட்டும் இம்மாத இறுதிக்கு ஒரு போஸ்ட் கார்டில் எழுதி எமக்கு அனுப்பவும்.

ஆசிரியர்

---

சத்திய வழி ரேடியோ நிகழ்ச்சி நடத்தும்
இலவச வேத பாடத் திட்டம்

வேதாகமத்தை மையமாக கொண்டு தயாரிக்கப்பட்ட முப்பது பாடங்களைக் கொண்ட வேத பாடம் உங்கள் இல்லங்களைத் தேடிவர ஆயத்தமாயிருக்கிறது இன்றே இதில் சேர்ந்து படிக்க ஒரு கடிதமூலம் கீழ் கண்ட முகவரியுடன் தொடர்பு கொண்டு படித்து பயன் பெறுக!

SATHYA VAZHI
Bible correspondence School
Post Box - 8405
Bangalore – 560 084 INDIA,

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No, 84661-92.
Registerd No TN/DDL/79.

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

ஞாயிறு காலை 9-00
வியாழன் மாலை 6-45

கிறிஸ்துவின் சபை
2-2-102 D/5, காமராஜபுரம்
கணவாய்ப்பட்டி ரோடு,
சப்ரிஜிஸ்டர் ஆபீஸ் சந்து
வத்தலக்குண்டு-624 202.

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu-624 202.
S. India

Edited and published by B.Arjunan M.A.,A.Bs.,on behalfof church of Christ 2.2.102D/5 Kanavaipatti Road,BTL
Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624 202.